# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 23.09.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனியிலுள்ள லஜ்னா மற்றும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமாக்கள் நடந்தன. எப்போதும் போன்றே அவை அல்லாஹ்வின் அருள்களை நமக்குக் காட்டுவதற்கு காரணமாக இருந்தன. குத்தாம்களிடமிருந்தும் பெண்களிடமிருந்தும் எனக்கு வரும் கடிதங்களிலிருந்தும் அவர்களுக்கு நான் எந்த விஷயங்களைக் கூறினேனோ அந்த விஷயங்கள் அவர்களுக்கு உள்ளேயிருந்த நல்ல இயல்பை அசைத்துள்ளது என்று எனக்கு தோன்றுகிறது. இதுதான் ஓர் அஹ்மதியின் சிறப்பாகும். அவ்வாறு இருக்கவும் வேண்டும். எப்போதெல்லாம் அல்லாஹ்வின் கட்டளையான ஸக்கீர் – நீர் போதனை செய்வீராக என்பதற்கேற்ப அவர்களுக்கு போதனைகள் செய்யப்படும் போதும் நினைவூட்டப்படும் போதும் அதனை அவர்கள் செவிதாழ்த்திக் கேட்கின்றனர். ஜமாஅத் சகோதரர்களின் ஒரு பெரும் எண்ணிக்கை இந்த போதனைகளையும் நினைவூட்டல்களையும் கேட்டு ஒரு நம்பிக்கையாளரின் பறிமாற்றத்தைக் காட்டியவாறு அல்லாஹ் கூறியிருக்கின்ற இந்த புகழுரையின் கீழ் அவர்கள் வருகின்றார்கள்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

அந்த மக்களுக்கு அவர்களது இறைவனின் வசனங்கள் நினைவூட்டப்படும் போது அவற்றுடன் அவர்கள் செவிடர்கள் போன்றும் குருடர்கள் போன்றும் நடந்து கொள்வதில்லை. அங்கு என்ன சொல்லப்பட்டது? அங்கு என்ன நடந்தது? எப்படிப்பட்ட சுற்றுச்சூழல் இருந்தது என்பதை நாங்கள் கேட்கவேயில்லை என்று அவர்கள் கூறமாட்டார்கள்.

மாறாக, அவர்கள் பலவீனமானவர்களாக இருந்தால் அவர்களுக்கு வெட்க உணர்வு ஏற்படும். நன்மைகளில் முன்னேறுவதற்கான முயற்சியை முதலிலேயே செய்து வருபவர்களாக அவர்கள் இருந்தால் பிறகு இந்த விஷயங்களையும் போதனைகளையும் கேட்டு அவற்றை செயல்படுத்த முன்பை விட அதிகமாக அவர்கள் முயற்சிகளைச் செய்வார்கள். இந்த இஜ்திமாவில் ஏறக்குறைய ஜமாஅத்தின் பாதி நபர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டவர்களின் பெரும்பாலார் தங்களிடம் தூய மாற்றத்தை உருவாக்கியவர்களாக ஆகி விட்டால் உலகை சீர்திருத்த எந்தப் புரட்சியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கொண்டு வர விரும்பினார்களோ, எந்தப் புரட்சியை அவர்களது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் ஏற்படுத்த வேண்டுமோ அந்தப் புரட்சிக்கு உதவி செய்வதில் தங்களது பங்கையும் செலுத்துபவர்களாக இவர்கள் ஆகி விடுவார்கள். பெரும்பாலார் என்று நான் கூறியதற்குக் காரணம் நிச்சயமாக பெரும் தாக்கத்தைப் பெறாத சில மக்களும் உங்களுக்கிடையே அமர்ந்திருப்பார்கள். ஆனால் எவர்கள் தாக்கத்தைப் பெற்றனரோ, தங்களை ஆய்வு செய்து பார்த்துள்ளனரோ, எவர்கள் எனக்கு கடிதங்கள் எழுதியிருக்கின்றார்களோ அவர்களும் இந்த விஷயத்தை நினைவில் வைக்க வேண்டும். அவர்கள் நான் கூறியுள்ள விஷயங்களின் பக்கம் மீண்டும் மீண்டும் அவற்றை சிந்தித்துப் பார்க்காமல் இருந்தால், அவ்வாறே கிளை அமைப்புகள் என் தரப்பிலிருந்து கூறப்பட்ட விஷயங்களை எப்போதும் நினைவூட்டாமல் இருந்தால் பிறகு சிறிது காலம் கழிந்த பிறகு இந்த விஷயங்கள், இந்த உணர்வு, இந்த வெட்க உணர்வின் வெளிப்பாடு ஆகியவை மங்கிப்போய் விடும்.

உண்மையில் இஜ்திமாவில் கலந்து கொள்பவர்களுக்கும் M.T.A. மூலமாக அதை உலகில் எங்கிருந்து எவர் கேட்டிருந்தாலும் அதன் விளைவு சிறப்பானதாக இருக்கும். M.T.A. மூலமாக நிகழ்ச்சிகளைக் கேட்டவர்களிடமிருந்தும் உணர்வுப் பூர்வமான கடிதங்கள் எனக்கு வந்துள்ளன. இன்னும் சொல்வதென்றால்

சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பெற்ற தாக்கத்தைப் பற்றியும் எனக்கு தெரிவித்துள்ளனர். எங்களது சிறுவர்கள் அதாவது அத்ஃபால்கள் உங்களது சொற்பொழிவைக் கேட்டார்கள். அப்போது 10 அல்லது 11 வயது நிரம்பிய அந்த சிறுவர்களின் முகத்தில் வெட்க உணர்வு இருந்தது என்று அவர்கள் எழுதுகின்றனர். ஒரு பையனின் தாயார் என்னிடம் எனது மகன் சொற்பொழிவைக் கேட்ட போது தனது முகத்திற்கு முன்னால் ஒரு துணியை வைத்துக் கொண்டார். நான் செய்கின்ற சில விஷயங்களைப் பற்றி இப்போது கூறப்படுகிறது. டி.வி.யிலிருந்து என்னைப் பார்த்துதான் அவர்கள் பேசுகின்றார்கள் என்று எனக்கு தோன்றுகிறது. என்னைப் பற்றி கூறப்படுவதால் நான் அவர்களுக்கு தெரியாமல் இருக்கும் வகையில் எனது முகத்தை மறைத்துக் கொண்டேன் என்று அந்த மகன் தன் தாயாரிடம் கூறினார்.

எனவே, இந்த இயல்பு நல்ல இயல்பாகும். இந்த ஆன்மாவை அல்லாஹ் இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தைச் சேர்ந்த சிறுவர்களிடம் கூட ஏற்படுத்தியுள்ளான். போதனைகளைக் கேட்டு குருடர்களாகவும் செவிடர்களாகவும் அவர்கள் நடந்து கொள்வதில்லை. மாறாக வெட்கப்பட்டு தங்களைச் சீர்திருத்திக் கொள்ள அவர்கள் முயற்சிகள் செய்கின்றனர். சிலர் தங்களது மொபைல் போன்களை அணைத்து விட்டனர். பள்ளிக்கூடத்தில் அமர்ந்து படிப்பின் பக்கம் செலுத்துவதற்குப் பதிலாக சில பிள்ளைகள் இன்டர்வெல் சமயத்தில் அல்லது விடுமுறை கிடைக்கும் போது நாம் நமது மெபைல் போன்களில் கேம் விளையாடலாம் என்ற சிந்தனையிலேயே இருந்து வந்தனர். அல்லது போன் மூலமாக கிடைக்கும் இன்னும் பிற வீணான விஷயங்களில் ஈடுபடலாம் என்று அவர்கள் நினைத்தனர். ஆனால் இப்போது நான் கூறிய விஷயங்களைக் கேட்ட பிறகு அந்தப் பிள்ளைகள் இவை அனைத்தும் வீணான விஷயங்களாகும். நாங்கள் இனி இதைப் பயன்படுத்த மாட்டோம். இதிலுள்ள இந்த விளையாட்டுக்களை விளையாட மாட்டோம் என்று கூறிவிட்டார்கள்.

இந்த விளையாட்டுக்கள் ஆரோக்கியத்தை உருவாக்காது. மூளைக்கான பயிற்சியும் இதில் இல்லை. மாறாக ஒரு போதயை அது ஏற்படுத்தி நிரந்தரமாக இதே விஷயங்களில் அவர்களை ஈடுபட வைக்கின்றது. ஒருவிதமான பைத்தியம் அதில் ஏற்பட்டு விடுகிறது.

ஆனால் இந்த விஷயத்தால் மட்டும் நாம் மகிழ்ச்சி அடைந்துவிட முடியாது. பெரிய பிள்ளைகள் தாமாகவே தமது நிலையைப் பற்றி சிந்திக்க வேண்டிய – ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. தொடர்ச்சியாக நிரந்தரமாக இந்த ஆய்வுகளை செய்வது அவசியமானதாகும். இவ்வாறே பெற்றோர்களும் நிரந்தரமாக தங்களது பிள்ளைகளுக்கு இதுபற்றி நினைவூட்ட வேண்டியது அவசியமானதாகும். நீ உன்னிடம் ஒரு நல்ல பழக்கத்தை உருவாக்கி விட்டால் பிறகு நிரந்தரமாக அதை உங்களது வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டும். சுற்றுச்சூழலின் தாக்கத்திற்கு ஆளாகக் கூடாது என்பதை அவர்களிடம் நீங்கள் கூற வேண்டும்.

எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நமக்கு தற்காலிகமாக ஏற்படும் மகிழ்ச்சிகள் மகிழ்ச்சிகளே அல்ல. மாறாக, எதுவரை நமது மகிழ்ச்சிகள், நமது நன்மைகள், நம்மிடம் ஏற்பட்டுள்ள தூய மாற்றங்கள் ஆகியவை நம்மிடம் நிரந்தரமாக இருப்பதற்குரிய வழியாக ஆகவில்லையோ அதுவரை நாம் அமைதியாக அமர்ந்து விட முடியாது. எதுவரை நிரந்தரமாக நாம் நமது நிலைமைகள் பற்றி ஆய்வு செய்து கொண்டிருப்பதில்லையோ அதுவரை நாம் அந்த மகத்தான புரட்சியில் பங்குபெறவும் முடியாது. நான் இஜ்திமாவில் கூறியது போன்றே நல்ல தரத்தைப் பெறுவது முன்பை விட அதிகமாக நாம் கவலைப்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது. முன்பை விட அதிகமாக அது நம்மீது பொறுப்புகளைச் சுமத்துகின்றது. ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரின் மீதும் கிளை அமைப்புகள் மீதும் ஜமாஅத் அமைப்பின் மீதும் அது பொறுப்புகளைச் சுமத்துகின்றது.

இந்த முறை சிறுமிகளும், பெண்களும் மிகவும் அமைதியுடனும் கவனத்துடனும் லஜ்னாக்களுக்கு நான் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து இவ்வகையில் எனக்கு அவர்களிடம் தாக்கம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக நான் பெண்களின் இயல்பின் காரணமாக 40 அல்லது 45 நிமிடங்களில் நான் கூற வேண்டியதைக் கூறி முடித்து விடுவேன். அதை விட அதிக நேரம் எடுக்காமல் இருக்க முயற்சி

செய்வேன். ஆனால் இந்த முறை லஜ்னா இஜ்திமாவின் போது நான் நேரத்தைப் பார்த்தேன். அப்போது ஏறக்குறைய ஒன்றேகால் மணி நேரம் ஆகியிருந்தது. ஆனால் சின்னஞ்சிறு சிறுமிகளும், குமரிப் பெண்களும், பெரிய வயதிலுள்ள பெண்களும் முழு நேரமும் மிகுந்த ஈடுபாட்டுடன் நான் கூறிய விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் கூறிய விஷயங்கள் அவர்கள் மீது சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இறைவன் ஆக்குவானாக! அதாவது அது நிரந்தரமான தாக்கமாக இருக்க வேண்டும். லஜ்னாவின் அமைப்பு நமது இஜ்திமா மிகவும் நல்ல முறையில் நடந்தது என்பது பற்றி நம்மைப் புகழ்ந்து கூறினார்கள் என்று மகிழ்ச்சி அடைந்து விட வேண்டாம். மாறாக நிரந்தரமான தொடர்ச்சியான செயலுக்காக இந்த விஷயங்களை உங்கள் செயல் திட்டத்தில் நீங்கள் சேர்க்க வேண்டும். அப்போதுதான் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உதவியாளராக ஆக முடியும். அப்போது தான் அந்தக் காலத்தைச் சார்ந்தவர்களாக நாம் ஆக முடியும்.

அதுபற்றி ஒரு அறிவிப்பில் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

எனது உம்மத் ஒரு அருளுக்குரிய உம்மத் ஆகும். இதன் ஆரம்ப காலம் சிறந்ததா? அல்லது இறுதிக் காலம் சிறந்ததா? என்பதை தெரிந்து கொள்ள முடியாது.

இரண்டு காலக்கட்டங்களும் தத்தமது தனித்தனி மகிமைகளைக் கொண்டவையாக இருக்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆரம்பக் காலத்துடன் இணைத்த அந்த இறுதிக் காலம் எது? இந்த இறுதிக்காலம் ஆகரீன்களுடைய – பின்னவர்களுடைய காலக்கட்டமாகும். இதுபற்றி திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரும் உண்மையான அடிமையுமாகிய அவர் தோன்றி, பின்னவர்களை முன்னவர்களோடு இணைக்க வேண்டியது இருந்தது. கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்ட மார்க்கத்தை அவர் தான் திரும்பக் கொண்டு வர வேண்டியதிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆட்சியை உலகில் நிலைநாட்ட வேண்டியதிருந்தது. வர வேண்டிய அவர் தமது தகுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்களுக்கு சமமானவராக இருப்பார் (நவூதுபில்லாஹ்) என்று ஒருபோதும் இதற்குப் பொருளல்ல. அவர்களின் காலக்கட்டம் சிறந்ததா அல்லது இறுதிக்காலக்கட்டம் சிறந்ததா? என்பதை நாம் அடையாளம் காண்பது கடினமாகி விடும் என்றும் இதற்குப் பொருளல்ல. இது நடக்க முடியாத ஒன்றாகும். ஒருவர் எஜமனராக இருக்கின்றார்; மற்றவர் அடிமையாக இருக்கின்றார்.

அதுபற்றி முஸ்லிமிலுள்ள ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் இம்ரான் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

என்னுடைய காலத்தைச் சார்ந்த மக்கள் சிறந்த மக்களாவார்கள். அதற்கு அடுத்தபடியாக இவர்களுக்குப் பிறகு வரும் மக்கள் சிறந்தவர்களாக இருப்பார்கள். இவ்வாறு அவர்கள் இரண்டு முறை கூறினார்களா அல்லது மூன்று முறை கூறினார்களா என்பது எனது நினைவில் இல்லை என்று ஹஸ்ரத் இம்ரான் அவர்கள் கூறுகின்றார்கள். தொடர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இவர்களுக்குப் பிறகு எத்தகைய மக்கள் தோன்றுவார்கள் என்றால் அவர்கள் அழைக்கப்படாத நிலையில் வந்து சாட்சி கூறுவார்கள். நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களாக இருப்பார்கள். மார்க்கத்தைப் பேணுவதைக் கைவிட்டு விடுவார்கள். நேர்த்திக்கடன்களை அவர்கள் நிறைவேற்றுவதில்லை. உடன்படிக்கைகளைப் பேணமாட்டார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் தோன்றிய பிறகு ஒரு காலக்கட்டம் வரும். அது முஹம்மதிய்ய உம்மத்திலிருந்து இருள்களின் மேகங்கள் அகன்றுவிடக்கூடிய ஒரு காலமாக இருக்கும். அப்போது பின்னவர்களின் மத்தியில் தோன்ற வேண்டிய அந்த மஹ்தி மஸீஹ் அல்லாஹ்வின் ஆதரவுடனும் உதவியுடனும் ஒவ்வொரு இடத்திலும் ஒளியின் இடத்திலும் ஒவ்வொரு வழிமுறை மூலமாகவும் நேர்வழிக்கான வழிவகைகளை அவர் செய்து கொண்டே செல்வார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை இவ்வாறு கூறியுள்ளார்கள்:**

எந்த மார்க்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முழுமை அடைந்ததோ, எந்த நேர்வழியின் அருட்கொடை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அதன் இறுதி எல்லையை அடைந்ததோ அது இந்தக் காலத்தில் வசதிகளும் தொடர்புகளும் உலகை ஓரிடத்தில் கொண்டு வந்து விட்டதால், ஆங்கிலத்தில் கூறுவதனால் உலகம் ஒரு Global Village ஆக ஆகிவிட்டதால், தொடர்புகளின் காரணமாக முழு பூமியும் ஒரு நகரமாக ஆகிவிட்டதால் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியுள்ள முழுமையான நேர்வழியைப் பரப்புவது இப்போது முழுமையடைந்து வருகிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் நேர்வழி முழுமை பெற்ற காலமாக இருந்தது. முஹம்மதிய மஸீஹின் காலம் நேர்வழியைப் பரப்புவது முழுமையடையக்கூடிய காலமாக இருக்கின்றது. உம்மத்தின் ஆரம்ப காலமானாலும் இறுதிக் காலமானாலும் இரண்டு காலக்கட்டங்களும் அருளுக்குரியவையாகும். ஏனென்றால் இந்த இரண்டு காலக்கட்டங்களுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

எனவே நாம் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்புடையவர்கள் என்று கூறும்போது மேலும் இப்படிப்பட்ட வாதத்தை நாம் செய்யும் போது நேர்வழியை பரப்புவதை முழுமையடையச் செய்வதன் ஒரு மிகப்பெரும் பொறுப்பு நம்மீது சுமத்தப்படுகிறது. நாமும் நமது நேர்வழிக்கான வழிவகைகளைச் செய்து கொளபவர்களாக ஆகும்போதுதான் நேர்வழியைப் பரப்பவும் நம்மால் முடியும். நாம் நமது உடன்படிக்கையைப் புதுப்பித்தவாறு அந்தக் காலத்தில் வாழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள், ஆரம்ப நூற்றாண்டுகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் ஆகியோரின் உயர்வான முன்மாதிரிகளைப் பார்க்க வேண்டும். அவர்கள் அந்த ஹிதாயத்தை, அந்த போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்து அதன் முன்மாதிரிகளாகத் திகழ்ந்தார்கள். தங்களது சொல்லாலும் செயலாலும் அதனை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டினார்கள். அவர்களது இந்த செயலையும், உயர்வான முன்மாதிரியையும் பார்த்து இறைவனோடு அவர்களுக்கு இருந்த தொடர்பைப் பார்த்து ஒரு காலக்கட்டமே அவர்களால் ஈர்க்கப்பட்டது. இஸ்லாம் வாளால் பரவியது என்ற குற்றச்சாட்டு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

சீனாவில் இஸ்லாம் பரவுவதற்காக எந்த இராணுவம் அங்கு சென்றது? அங்கு எந்த முஸ்லிம்கள் வாளை ஏந்தியவாறு போர் புரிவதற்குச் சென்றார்கள்? என்று அவர்கள் கேட்கின்றார்கள். அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்:

வியாபாரிகளும், தூதுச் செய்தியை எட்ட வைப்பவர்களுமாகிய பல்வேறு பணிகளில் ஈடுப்பட்டிருந்த சஹாபாக்கள் அல்லது அவர்களுக்குப் பிறகு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அங்கு எட்ட வைத்தார்கள். இந்த வியாபாரிகளும் பல்வேறு பணிகளுடன் தொடர்புடையவர்களும் அங்கு சென்ற போது அவர்கள் தங்களது உயர்வான முன்மாதிரியை அங்கு காட்டினார்கள். தங்களது தூய போதனைகள் பற்றி அங்கு தெரிவித்தார்கள். அதை செயலால் வெளிப்படுத்திக் காட்டினார்கள். அதன் மூலமாக அங்கு இஸ்லாம் பரவியது. இன்று சீனாவில் கோடிக்கணக்கான முஸ்லிம்கள் வாழ்வதை நாம் பார்க்கின்றோம்.

எனவே ஒவ்வொரு துறையைச் சார்ந்த மக்களும் தங்களது நிலைமைகளைப் பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. நிரந்தரமாக தங்களது பொறுப்புகளைப் புரிய வேண்டிய தேவை இருக்கின்றது. எவ்வாறு நாம் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். எவ்வாறு நாம் நமது நிலைமைகளைச் சிறந்ததாக ஆக்கலாம்? என்று நாம் பார்க்க வேண்டும்.

சீனாவின் உதாரணத்தை நான் கூறியதோடு இன்னொரு விஷயத்தையும் கூறி விடுகின்றேன். இன்றைய நாட்களில் சீனாவில் நேரடியாக தப்லீக் செய்து முஹம்மதிய மஸீஹின் தூதுச் செய்தியை எட்ட

வைப்பது கடினமானதாகும். இத்தகைய துர்பாக்கிய நிலை அங்கு இருந்து வருகிறது. ஆனால் இது நேர்வழியைப் பரப்புவது முழுமை அடையக்கூடிய காலமாக இருப்பதால் அல்லாஹ் தாமாகவே இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான பல்வேறு வழிவகைகளை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றான்.

எவ்வாறு ஜெர்மன் ஜமாஅத்திற்கு அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை ஜெர்மனியில் பரப்புவதற்கான சர்ந்தர்ப்பம் கிடைத்துள்ளதோ, அதற்காக நேர்வழியைப் பரப்புவதற்கான பல்வேறு வழிகளை அல்லாஹ் தந்துள்ளானோ அவ்வாறே சீனாவில் ஒரு பொருட்காட்சியில் பங்கேற்று ஜமாஅத்தை அவர்கள் அறிமுகப்படுத்துவதற்கும் அவன் வாய்ப்பளித்தான். கடந்த இரண்டு வருடங்களாக ஜெர்மனியிலிருந்தே சீனாவிற்குச் சென்று பொருட்காட்சியில் பங்குபெற்று நூல்களின் ஸ்டால்களை கொடுப்பதற்கான சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. ஜெர்மனி ஜமாஅத்திற்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. புதிய வழிகள் திறக்கப்பட்டுள்ளது. சீன மொழியில் நமக்கு நூல்கள் கிடைக்கவில்லையென்றால் இந்தப் பணி நடந்திருக்காது. ஆனால் அல்லாஹ் முதலிலேயே இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தான். அல்லாஹ்வின் அருளால் சீனா டெஸ்க் தனது பணிகளைச் சிறப்பாச் செய்து வருகிறது. மதிப்பிற்குரிய உஸ்மானி சீனி சாஹிப் இதன் இன்சார்ஜ் ஆக இருக்கிறார். திருக்குர்ஆனும், ஏனைய நூல்களும் வெளியிடப்படும் பணிகளும் நடந்து வருகிறது. ஜெர்மனி ஜமாஅத்திற்கு அல்லாஹ்வின் அருளால் இவற்றை சீனாவில் எட்ட வைப்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்து வருகிறது.

இவ்வாறே உலகில் மிகத் தொலைவில் உள்ள நாடுகளில் அந்த நாடுகளில் பேசப்படும் மொழிகளில் திருக்குர்ஆனையும் ஏனைய நூல்களையும் எட்டவைப்பதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்கியுள்ளான். இது இந்தக் காலம் அருளுக்குரியது என்பதற்கான அடையாளமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூதுச் செய்தி எவ்வாறு உலகின் எல்லைகள் வரை சென்றடைந்துள்ளது என்பதைப் பார்க்கும் போது இந்தக் காலம் அருளுக்குரியது என்பதற்குரிய அடையாளமாக அது இருக்கின்றது. நேர்வழியைப் பரப்புவதை முழுமையடையச் செய்கின்ற பணிகளில் பங்கு பெறுகின்றவர்களும் அருளுக்குரியவராக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிழ்ச்சியில் இவர்கள் பங்கு பெறுகின்றனர். அவர்களது காலத்தின் மறுமலர்ச்சிக்காக அவர்கள் முயற்சிகளைச் செய்கின்றார்கள்.

இந்த விஷயத்தை ஒவ்வொரு அஹ்மதியும் புரிய வேண்டிய தேவை இருக்கின்றது. தற்காலிகமாக தமது உணர்வுகளை வெளிப்படுத்துவது மட்டும் போதுமானதல்ல. மாறாக அல்லாஹ் தனது அருளால் குறிப்பான அருளாக கருதி அதிலிருந்து முழுமையாக பயனடைய வேண்டியது அவசியமானதாகும். இதற்காக முடிந்த வரை முயற்சிகள் செய்ய வேண்டியது அவசியமானதாகும். சீனாவில் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு ஜெர்மனி ஜமாஅத்திற்குதான் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இவ்வாறே பக்கத்திலுள்ள வேறு நாடுகளும் உள்ளன. அந்த நாடுகளிலும் இதேபோன்று சந்தர்ப்பம் நமக்கு கிடைத்து வருகிறது. இந்த அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள். முதலில் 3 அல்லது 4 பேருக்கு இதன் பக்கம் கவனம் இருந்தது என்றால் அல்லது சில நூறுகளின் எண்ணிக்கையில் மக்களுக்கு இதன் பக்கம் கவனம் இருந்தது என்றால் எவ்வாறு நீங்கள் இஜ்திமாவிற்குப் பிறகு உங்களது உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றீர்களோ அவ்வாறே ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் நீங்கள் உங்களது தூய்மையான செயல்கள், தூய்மையான முன்மாதிரிகள் மூலமாகவும் உங்களது உடன்படிக்கைகளைப் புதுப்பித்துக் கொள்வதன் மூலமாகவும் அந்தப் புரட்சியில் பங்கு பெறுவதுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கியுள்ள அந்த அருளுக்குரிய மக்களுடன் இணைபவர்களாக ஆகிவிட வேண்டும். அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதிக்காலமும் அருளுக்குரியதாக இருக்கும் என்ற நற்செய்தியை வழங்கியிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பவர்களே அருளுக்குரியவர்கள் ஆவர். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கியிருந்த நற்செய்திகளில் கிலாஃபத் பற்றிய நற்செய்தியும் ஒன்றாகும். முஸ்லிம் சமுதாய முன்னேற்றத்தின் அடித்தளமாக கிலாஃபத் இருப்பதால் அதுதான் எல்லாவற்றையும் விட

முதன்மையானதாக இருக்க வேண்டும். ஏனென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனக்குப் பிறகு உம்மத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளமாக கிலாஃபத்தே ராஸிதாவை அதாவது நேர்வழி பெற்ற கிலாஃபத்தைத்தான் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். இந்த கிலாஃபத்தின் காலக்கட்டம் முடிவடைந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்குப் பிறகு கொடுங்கோல் ஆட்சியும் அதற்குப் பிறகு சர்வாதிகார ஆட்சியும் தோன்றும் என்று கூறியுள்ளார்கள். அதன் காரணமாக உம்மத்திலுள்ள மக்களது உள்ளங்கள் புண்படும். உள்ளத்தால் இந்த துக்கத்தை அவர்கள் உணர்வார்கள். அது ஒரு இருள்நிறைந்த காலக்கட்டமாக இருக்கும். அதற்குப் பிறகு அல்லாஹ்வின் கருணை பொங்கி எழுகின்ற ஒரு காலம் வரும். உம்மத்தின் மீது அல்லாஹ்வின் அன்பின் பார்வை விழும். அதன் விளைவாக அந்த அநீதியின் காலக்கட்டத்தை அல்லாஹ் முடிவுக்குக் கொண்டு வருவான். பிறகு நபித்துவ வழியிலுள்ள கிலாஃபத் நிலைநாட்டப்படும். அது நிரந்தரமாக இருக்கும்.

முஸ்லிம் உம்மத்தை அல்லாஹ் உலகில் சிறந்த உம்மத்தாக ஆக்கியுள்ளான். இதன் மறுமலர்ச்சி ஏற்படும். இன்று பல்வேறு முஸ்லிம் ஆலிம்கள் மற்றும் அமைப்புகள் சார்பாக பல்வேறு சமயங்களில் உம்மத்தில் கிலாஃபத் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்படுகிறது. இவ்வாறு இவர்கள் ஏன் கூறுகின்றார்கள் என்றால் இந்த உம்மத் கிலாஃபத் இல்லாமல் எஞ்சியிருக்க முடியாது என்பது இவர்கள் எல்லாருக்குமே தெரியும். ஆனால் நபித்துவ வழியிலுள்ள கிலாஃபத் எவர் மூலமாக நிலைநாட்டப்பட்டதோ அந்த அல்லாஹ்வின் தூதரை இவர்கள் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. இந்த உம்மத் எஞ்சியிருப்பதும், இந்த உம்மத்திலிருந்து அநீதிகளை முடிவுக்குக் கொண்டு வருவற்கும் இருள்களை அகற்றுவதற்கும் அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி மூலமாக ஆரம்பித்த அந்த அமைப்பு தான் அவசியமானதாக இருக்கின்றது என்பதற்கு திருக்குர்ஆனும், ஹதீஸும் ஆதரவாக இருக்கின்றது.

இன்று ஒவ்வொரு முஸ்லிம் நாட்டின் உட்புற நிலைமையும் இந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் அறிவிக்கின்றது. எனவே கவனமாக சிந்தனை செய்யுங்கள். உங்களோடு என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது? என்று பாருங்கள். அல்லாஹ்வும் அவனது தூதரும் எந்த விஷயத்தின் பக்கம் அழைக்கின்றார்களோ அதன் பக்கம் வாருங்கள். இதுவே உங்களது எல்லா பிரச்சனைகளுக்கும் உரிய தீர்வாக இருக்கின்றது. உங்களது நாடுகளில் நிலவும் அமைதியின்மைக்கும் இதுதான் தீர்வாக இருக்கின்றது. இந்த அனைத்து தீங்கிலிருந்தும் தப்பிப்பதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கின்றது. அது இக்காலத்தில் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ள மஸீஹையும் மஹ்தியையும் ஏற்றுக் கொள்வதாகும். எனவே இந்த தூதுச் செய்தியை நாம் உலகத்திற்கும் எட்ட வைக்க வேண்டும். ஜெர்மனிக்கும் இந்த தூதுச் செய்திதான் கூறப்பட வேண்டும். ஐரோப்பா, ஆசியா, அரபு நாடுகள் ஆகியவற்றிற்கும் இந்த தூதுச் செய்தி தான் கூற வேண்டும். எதன் பக்கம் அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களை அழைக்கின்றார்களோ அதன் பக்கம் வாருங்கள். அந்த மஸீஹையும், மஹ்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுங்கள். பொங்கி எழுந்துள்ள இறைவனது கருணையே தனது அன்பரை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தது. அவருக்கு உதவி செய்பவராக நீங்கள் ஆகி விடுங்கள். நீங்கள் எஞ்சியிருப்பது இதில் தான் இருக்கின்றது.

பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் அஹ்மதிகள் மஹ்தி, மஸீஹின் இந்த தூதுச் செய்தியை பிறருக்கு எட்ட வைப்பதன் காரணமாக அவர்கள் மீது கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. அவ்வாறிருந்தும் உம்மத்தின் மீதுள்ள அனுதாப உணர்வால் அவர்கள் இந்த தூதுச் செய்தியை பிறருக்கு எட்ட வைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். உண்மையில் இந்த தூதுச் செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியாகும். இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்வதன் மூலம் உம்மத்திலுள்ள பெரும்பாலான மக்கள் இறுதிக்காலத்தை அடைந்து உம்மத்திலுள்ள அருளுக்குரிய மக்களுடன் இணைய முடியும். எனவே இந்த தூதுச் செய்தியைப் பரப்புவது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும். மேலும் நான் பலமுறை கூறியிருப்பது போன்று நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நம்மை அஹ்மதிகள் என்று கூறிக்

கொள்கின்ற நம்மில் எத்தனை பேர் 24 மணி நேரத்தில் ஒருமுறை அல்லது ஒரு வாரத்தில் ஒருமுறை அல்லது மாதத்தில் ஒருமுறையாவது நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நமக்கு தொடர்பு இருப்பதாகக் கருதுகின்றோம். அதன் விளைவாக நம்மீது என்ன பொறுப்புகள் உள்ளன என்பதைப் பற்றி எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றோமா? நமது இறைவணக்கத்தின் தரம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? நமது நல்லொழுக்கத்தின் தரம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? எங்களிடத்தில் நபித்துவ வழியிலுள்ள கிலாஃபத் நிலைநாட்டப்பட்டிருக்கின்றது என நாம் பெருமையுடன் கூறுகின்றோம். ஆனால் அதற்கு உதவி செய்வதற்கு நாம் என்ன பணிகளைச் செய்கின்றோம் என்று நாம் சிந்திக்கின்றோமா? இது நாம் சிந்திக்க வேண்டிய இடமாகும். அல்லாஹ்வின் கருணை உணர்வுடன் பொங்கி எழுந்துள்ளது. அதன் விளைவாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் போன்ற மகத்தான மனிதரை – ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அல்லாஹ் நமது சீர்திருத்தத்திற்காக அனுப்பி வைத்துள்ளான். மேலும் நாம் அவரிடம் பைஅத் செய்வதற்கான நற்பாக்கியத்தையும் அவன் நமக்கு வழங்கியுள்ளான். இந்த மகத்தான மனிதரிடம் பைஅத் செய்தது மட்டும் போதுமானதா? இறுதிக்காலமும் முன்னுள்ள காலத்தைப் போன்றே சிறப்பானதாகவும் அருளுக்குரியதாகவும் இருக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்ததன் கருத்து முஹம்மதிய்ய மஸீஹை ஏற்றுக் கொண்டவர்கள் அவர்கள் கொண்டு வரவிருந்த அந்த மகத்தான புரட்சியை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருப்பார்கள் என்பதேயாகும். எந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்களோ அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் காரணமாக அமைவார்கள். அந்த சொர்க்கத்தை உலகில் உருவாக்குவதற்கு அவர்கள் ஊடகமாக செயல்படுவார்கள். அதுதான் மறுமையில் அவர்கள் சொர்க்கத்தின் வாரிசாக ஆவதற்கு அவர்களுக்கு உதவி செய்யக்கூடியதாக இருக்கும். எனவே இன்று ஒவ்வொரு அஹ்மதியும் அந்தப் புரட்சியைக் கொண்டு வருவதற்குரிய தனது பங்கை செலுத்த வேண்டும். இந்தக் காலத்தில் ஒரு மகத்தான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய தனது பணியைச் செய்ய வேண்டும். உலகத்தை சொர்க்கமாக உருவாக்குவதில் தனது பங்கை செலுத்த வேண்டும். இதற்காக நாம் திருக்குர்ஆனின் பக்கம் திரும்பியவாறு அதன் கட்டளைகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தக் கட்டளைகளுக்கேற்ப நாம் நமது வாழ்க்கையை புரட்சியையும் மாற்றங்களையும் உருவாக்குபவையாக அமைத்துக் கொண்டால் அதன் மூலம் உலகமும் சொர்க்கமாக ஆகிவிடும். பிறகு உலகம் நமக்குப் பின்னால் வரும் – இன்ஷா அல்லாஹ். நிச்சயமாக நமக்குப் பின்னால் அது வரும். இன்று நாம் பலவீனர்களாக இருக்கின்றோம். வெளிப்படையாகப் பார்க்கும் போது உலகத்தின் பார்வையில் நமக்கு எந்தத் தகுதியும் இல்லை. ஒவ்வொரு இடத்திலும் நாம் கொடுமைகளுக்கு ஆளாகின்றோம். நாம் நமது பைஅத்தின் உண்மை நிலையைப் புரிந்தவாறு ஒரு புதிய உறுதிப்பாட்டுடன் எழும் போது இந்த மக்களுக்கு இந்த நற்பேறு கிடைக்காமல் போனாலும் நிச்சயமாக இவர்களது சந்ததிகள் ஒருநாள் முஹம்மதிய மஸீஹின் அடிமைகளாக ஆகுவதை தங்களது பெருமையாகக் கருதுவார்கள்.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் பைஅத்தின் உரிமையை நிறைவேற்றும் வகையில் தனது சொல்லையும் செயலையும் அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இந்த மேற்கத்திய நாடுகளில் உலக இன்பங்களில் மூழ்கி நீங்கள் தொலைந்துபோய் விடாதீர்கள். இஜ்திமாக்களும் மாநாடுகளும் உங்களது வாழ்க்கையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று நீங்கள் கருதுவதாக இருந்தால் இந்தத் தாக்கத்தை தற்காலிகமானதாக விட்டு விடாதீர்கள். மாறாக இவற்றை வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அருளால் இந்த உண்மையைப் புரிந்தவர்கள் ஜமாஅத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களது நஃப்ஸை இதற்காக தியாகம் செய்துள்ளார்கள். இதன் ஆன்மாவைப் புரிந்து இதனை அவர்கள் செய்கின்றார்கள். ஆண்களிலும் இருக்கின்றார்கள். பெண்களிலும் இருக்கின்றார்கள். முதலில் எனக்கு வக்ஃபே நவ் திட்டத்தின் கீழிருந்த இளைஞர்கள் பற்றிய கவலை இருந்தது. அவர்களுக்கு வக்ஃபே நவ் என்றால் என்ன? என்பதே தெரியாமல் இருந்தது. அவர்கள் இளைஞர்களாக

ஆகிவிட்டனர். ஜாமிஆவில் படித்தவர்கள் மட்டுமே வக்ஃபே நவ் திட்டத்தில் இருப்பவர்கள் ஆவர். அவர்களே ஜமாஅத் பணிகளைச் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர் என்று இவர்கள் கருதினர். தங்களது வாழ்க்கைக்கு எந்த நோக்கமும் இல்லை என்று கருதியவாறு தாங்கள் செய்ய விரும்பிய வேலையை அவர்கள் செய்ய ஆரம்பித்து விட்டனர். வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் இருந்த ஒருவர் எங்கு சென்றுள்ளார்? என்பது கூட தலைமையகத்திற்குத் தெரியாமல் இருந்தது. வக்ஃபே நவ் என்ற பெயர் நமக்குக் கிடைத்திருப்பதே போதுமானது என்று இவர்கள் கருதினர். ஆனால் இப்போது பல்கலைக்கழகங்களிலுள்ள மாணவர்களிடம் கேட்டாலும் அவர்கள் நாங்கள் இந்தக் கல்வியைக் கற்பதற்கு தலைமையகம் அனுமதி தந்த பிறகுதான் கற்கின்றோம் என்று கூறுகின்றனர். மேலும் நாங்கள் படித்து முடித்த பிறகு முழுமையான முறையில் ஜமாஅத்திற்காக தொண்டு செய்ய வந்து விடுவோம் இன்ஷா அல்லாஹ் என்று அவர்கள் கூறுகின்றனர். இந்த ஆன்மா அல்லாஹ்வின் அருளால்தான் ஏற்படுகின்றது. இந்த சுற்றுச்சூழலில் இருந்தவாறு உங்களை நீங்கள் தவறான விஷயங்கள், தவறான பணிகள் ஆகியவற்றிலிருந்து தூய்மையாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். இங்குள்ளவர்கள் தங்களை தூய்மையாக வைத்திருக்க முயற்சிகளைச் செய்கின்றனர். பொருள் தியாகத்தைப் பொருத்தவரையில் அதிலும் ஜமாஅத் முன்னேறி வருகிறது.

நேற்று ஒரு பெண் தங்க நகைகளின் குவியல் ஒன்றை என்னிடம் தந்து விட்டு சென்றார். இதை நான் ஜமாஅத்திற்குக் கொடுப்பேன் என்று நான் உடன்படிககை செய்திருந்தேன். இப்போது என் மீது இவை ஹராமாகி விட்டன என்று அவர் கூறினார். உங்களுக்காகவும் இதிலிருந்தும் சிலவற்றை வைத்துக் கொள்ளுங்கள் என்று நான் அவரிடம் கூறிய பிறகும் அவர் என்னிடம் எந்த உடன்படிக்கையை நான் இறைவனிடம் செய்திருந்தேனோ இதை நிறைவேற்றுவதிலிருந்தும் என்னை தடை செய்யாதீர்கள் என்றே கூறினார். இந்தப் புரட்சியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தில் உருவாக்கியுள்ளார்கள். இந்த மக்கள் இறைவணக்கத்திலும்கூட பணிவையும் உருக்கத்தையும் மேற்கொள்கின்றனர். ஷரீஅத்தின் ஏனைய கட்டளைகளையும் செயல்படுத்துபவர்களாக இருக்கின்றனர். வியாபார விஷயங்களிலும் குடும்ப விஷயங்களிலும் ஷரீஅத்தின் கட்டளைகளைப் பேணி நடக்கின்றனர். இதன் மூலமாக வீடும் சமுதாயமும் சொர்க்கத்திற்கு ஈடானதாக ஆகி விடுகின்றது. இந்தக் காலத்தில் எல்லா தரப்பிலும் உலக இச்சைகளும் சுயநலமும் மிகைத்து நிற்கின்ற தருணத்தில் நன்மைகளைத் தொடர்ந்து செய்து வந்து அவற்றில் தொடர்ந்து உறுதியாக நிலைநிற்பதற்கு அல்லாஹ்விடம் துஆ கேட்பது ஆகியவை நிச்சயமாக இறைவனின் திருப்தியைப் பெறுவதற்குக் காரணமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மக்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால், இப்படிப்பட்ட மக்கள் மிகவும் அதிகமாக இருக்க வேண்டும். அதன் மூலமாக நமது முழு சுற்றுச்சூழலும் நமது சமுதாயமும் இவ்வுலகிலும் மறு உலகிலும் அல்லாஹ்வின் சொர்க்கத்திற்கு வாரிசாகத் திகழ வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலம் தொடர்பாக அல்லாஹ் அக்காலத்தில் சொர்க்கம் அருகில் கொண்டு வரப்படும் என்றே கூறியுள்ளான். இது தொடர்பாக திருக்குர்ஆனில் அல்லாஹ், சொர்க்கம் அருகில் கொண்டு வரப்படும் போது என்று கூறுகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்து அருகில் கொண்டு வரப்பட்டுள்ள இந்த சொர்க்கத்திலிருந்து பலன்பெறுகின்ற மக்கள் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். அல்லாஹ்வின் இந்த அருட்கொடையிலிருந்து முழுமையான பலனைப் பெறாத மக்களுக்கு இது கவலையளிக்கக்கூடிய இடமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

நீங்கள் ஒரே விதமான நன்மைகளைச் செய்வதால் அல்லாஹ்வின் முழுமையான திருப்திக்கு உரியவர்களாக ஆகி விடுவீர்கள் என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக எல்லா நன்மைகளையும் செய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் மூலமாக அல்லாஹ்வின் அன்பின் பார்வை உங்கள் மீது விழும்.

எனவே நாம் அல்லாஹ்வின் அன்பின் பார்வை நம் மீது விழுவதற்கு நமது எல்லா செயல்களையும் கண்காணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் மூலமாக அல்லாஹ்வின் கருணையால் எந்த சொர்க்கம் நமக்கு அருகில் கொண்டு வரப்பட்டுள்ளதோ அதைப் பெறுபவர்களாக நாம் ஆக வேண்டும். நாம் இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவர்கள் நமக்கு தக்வாவின் வழிகளில் செல்வதற்கும் அல்லாஹ்விற்குள்ள உரிமைகளையும் அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதன் பக்கம் மிகவும் அதிகமாகக் கவனமூட்டியுள்ளார்கள். நமக்கு வழிகாட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் இறை நேசராகவும் பீராகவும் மாறுங்கள். வலிமார்களையும் பீர்களையும் வணங்குபவர்களாக ஆகிவிடாதீர்கள்.

இன்றைய காலத்துப் பீர்கள் மார்க்கத்தை பரிகாசத்தின் சின்னமாக ஆக்கி விட்டார்கள். ஒவ்வொருவரும் சுயமாக பீராகவும் வலி ஆகவும் மாற வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இது எவ்வளவு பெரிய ஆசையாகும் என்று பாருங்கள். ஆனால் இஸ்லாத்தைப் பரிகாசத்தின் சின்னமாக ஆக்கியுள்ள இன்றைய காலத்துப் பீர்கள் போன்று நீங்கள் ஆக வேண்டாம். மக்களைத் தவறான வழிகளில் செலுத்தி சுவர்க்கத்தின் பேராசையை ஊட்டி இவர்கள் மக்களுக்கு நரகத்தின் பக்கம் செல்வதற்கு வழிகாட்டுகின்றார்கள்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒருமுறை கூறினார்கள். அவர்களின் சகோதரி ஒருவர் ஒரு பீரின் முரீத் ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தனது சகோதரியிடம் நீங்களும் கொஞ்சம் இறைவனுக்கு அஞ்சுங்கள். உங்களது உலகையும் மறுமையையும் சரிசெய்து கொள்ளுங்கள். அஹ்மதியாகி விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர்களின் சகோதரி நான் அஹ்மதி ஆக வேண்டிய தேவையில்லை. நான் இந்த பீர் சாஹிபிடம் பைஅத் செய்துள்ளேன். அவர் மிக உன்னதமான தகுதியை அடைந்துள்ள பீர் ஆவார்கள். உனக்கு எந்த வகையான நன்மைகளையும் செய்ய வேண்டிய தேவை இல்லை; நீ எனது உண்மையான சீடராக இருக்கின்றாய்; எனவே உனது உள்ளம் எதை விரும்பினாலும் அதை நீ செய்யலாம்; எந்த நன்மையையும் செய்ய வேண்டிய தேவையில்லை; உனது எல்லா பாவங்களையும் நாம் சுமந்துள்ளோம் என்று அவர் என்னிடம் கூறியுள்ளார்.

கிறித்துவப் பாவநிவர்த்திக் கொள்கையை இவர்கள் பின்பற்ற ஆரம்பித்து விட்டனர். முஸ்லிம் பீர்கள்தான் இவற்றை உருவாக்கியுள்ளனர். இப்படிப்பட்டவர்கள் தங்களை கைர உம்மத் அதாவது சிறந்த சமுதாயம் என்று கூறிக்கொள்வதற்கான உரிமையைப் பெற்றவர்களாக இருக்கின்றார்களா?

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் எனது சகோதரியிடம் நீங்கள் உங்களது பீர் சாஹிபிடம் மீண்டும் சென்று கியாமத் நாளன்று ஒவ்வொரு நபரிடமும் அவரது செயல் தொடர்பாக அவரிடம் கேட்கப்படும் போது அவர் செய்த பாவங்களின் காரணமாக அவருக்கு செருப்படி கிடைக்கும் போது உங்களது முரீதுகளின் பாவங்களைச் சுமந்திருக்கின்ற உங்களுக்கும் செருப்படி கிடைக்குமா? என்பதை பீர் சாஹிபே! நீங்கள் எப்போதாவது இதுபற்றி சிந்தித்துப் பார்க்கவில்லையா என்று உங்கள் பீர் சாஹிபிடம் கேளுங்கள் என்று கூறினேன்.

அதற்கு எனது சகோதரி கண்டிப்பாக நான் இந்தக் கேள்வியை பீர் சாஹிபிடம் கேட்பேன் என்று கூறினார்கள். மீண்டும் அவர்கள் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திக்க வந்த போது அவர்கள் பீர் சாஹிபிடம் இந்தக் கேள்வியைக் கேட்டீர்களா என்று அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஆம் நான் அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டேன். எந்த விஷயத்தை நீங்கள் ஒரு பெரிய பிரச்சனையாக எடுத்து

வைத்தீர்களோ அதை நொடிப்பொழுதில் பீர் சாஹிப் தீர்த்து வைத்து விட்டார் என்று கூறினார். அதைக் கேட்ட முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எப்படி தீர்த்து வைத்தார்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் கூறினார்கள். பீர் சாஹிப் என்னிடம் கூறினார்கள். மறுமையில் மலக்குகள் உன்னிடம் இன்னின்ன பாவங்களை நீ ஏன் செய்தாய்? என்று கேட்டால் அதற்கு நீங்கள் எனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. இங்கே நிற்கின்ற இந்த பீர்தான் உனது உள்ளம் விரும்புவதைச் செய்து கொள் என்று கூறினார் என்று நீ சொல்லி விடு. அவ்வாறு நீ கூறினால் அந்த மலக்குகள் உன்னை விட்டு விட்டு எனது பக்கம் பார்ப்பார்கள். உன்னிடமிருந்து தங்களது பார்வையை அவர்கள் அகற்றிய உடனேயே நீ ஓடிச்சென்று சுவர்க்கத்தில் நுழைந்து விடு. அடுத்து எனது விஷயம் மட்டும் எஞ்சியிருக்கும். மலக்குகள் என்னிடம் கேள்வி கேட்கும் போது நான் எனது சிவந்த கண்களால் அவர்களைப் பார்த்தவாறு மிகுந்த கோபத்தோடு நமது பாட்டனாரான இமாம் ஹுஸைன் அவர்கள் கர்பலாவில் செய்த தியாகங்கள் போதுமானதாக இல்லையா? இன்று மீண்டும் நீங்கள் எங்களுக்கு தொல்லை கொடுக்கின்றீர்களா? உலகில் இருந்த சமயத்தில் உலகத்திலுள்ளவர்கள் எங்களை வாழவிடவில்லை. இன்று இங்கு வந்தால் நீங்களும் இதே வழிமுறையைத்தான் மேற்கொள்கின்றீர்கள். மேலும் எங்களது செயல்கள் தொடர்பாக எங்களிடம் கேட்கின்றீர்கள் என்று நான் அவர்களிடம் கேட்பேன்.

இதைக் கேட்ட பிறகு மலக்குகள் வெட்கம் அடைந்து என்னிடமிருந்து விலகிச் சென்று விடுவார்கள். நாம் நமது கழுத்துகளை உயர்த்தியவாறு பிறர் மீது மிகுதியான திகிலை ஏற்படுத்தியவாறு பெருமையுடன் சுவர்க்கத்தில் நுழைவோம் என்று பீர் சாஹிப் கூறினார். இதுதான் இன்றைய பீர்களின் நிலையாகும்.

இன்றைய காலத்துப் பீர்களின் நிலையும் இப்படித்தான் இருக்கின்றது. எந்தச் செயலும் இல்லாமலேயே சுவர்க்கத்தை வழங்கக்கூடியவர்களாக இவர்கள் உள்ளனர். உண்மையில் இவர்கள் நரகத்தின் பக்கமே வழிகாட்டக் கூடியவர்களாக இருக்கின்றார்களா. இந்த பீர்கள் தாமும் நரகத்தில் விழுந்து தன்னை ஏற்றுக் கொண்டவர்களையும் நரகத்தில் விழும்படி செய்கின்றார்கள்.

இந்த அருளுக்குரிய காலக்கட்டத்தில் உண்மையிலேயே சுவர்க்கம் மனிதனுக்கு அருகாமையில் கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த சுவர்க்கத்தின் வழிகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்குக் காட்டியுள்ளார்கள்.

திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றிற்கு அழகான விளக்கங்களைத் தந்து நற்செயல்களைச் செய்வதன் பக்கம் கவனமூட்டி வீணான விஷயங்களையும் பித்அத்களையும் ஒழித்துக்கட்டி உலகிற்கு இறைவன் முன்னால் தலைகுனிந்து ஸஜ்தா செய்வதற்கான வழிமுறைகளை அவர்கள் கற்றுத் தந்தார்கள். இந்த வழிகளில் செல்வதன் மூலமே சுவர்க்கம் அருகில் கொண்டு வரப்படுகிறது.

இந்தப் பீர்களின் பின்னால் செல்கின்ற ஒரு பெரும் பிரிவினர் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பெரும்பாலான முஸ்லிம் நாடுகளிலும் இருக்கின்றனர். இவர்களில் அறிவீனர்கள் மட்டுமல்ல. நன்கு படித்தவர்களும் இருக்கின்றார்கள். தலைவர்கள் இருக்கின்றார்கள். அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். இவர்களில் பலரையும் எனக்குத் தெரியும். அவர்கள் தொழமாட்டார்கள். குர்ஆன் ஓதமாட்டார்கள். அவர்களது துஆக்கள் நமக்கு போதும் என்று நினைப்பவர்கள் உள்ளனர். சுவர்க்கங்கள் இவ்வாறு அருகில் கொண்டு வரப்பட்டு அது நமக்கு கிடைப்பதாக இருந்தால் பிறகு திருக்குர்ஆனின் கட்டளைகளின் எந்தத் தேவையும் இருக்காது. நவூதுபில்லாஹ். திருக்குர்ஆனே தேவையில்லாமல் இருந்திருக்கும்.

நாம் மிகுந்த நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம். நாம் இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக்கொண்டு சுவர்க்கத்தின் உண்மை நிலையை தெரிந்து கொண்டோம். இறைவனது திருப்தியைப் பெறுவதற்கான அறிவைப் பெற்றோம். பலரும் என்னிடம் துஆவிற்காக வேண்டுகின்றார்கள். அவர்களிடம் நீங்கள் முறையாக தொழுகின்றீர்களா என்று கேட்கும்போது அவர்கள் தொழவில்லை என்பது தெரிய வருகிறது. நான் அவர்களிடம் முதலில் சுயமாக நீங்கள் துஆ செய்யுங்கள். பிறகு உங்களது துஆக்கள்

மூலமாக எனது துஆக்கள் கபூல் செய்யப்படுவதில் எனக்கு உதவி செய்பவராக ஆகிவிடுங்கள் என்று பதில் கூறினேன். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மிடம் நிலைநாட்டிய நடைமுறைக்கு ஏற்பவே உள்ளது. ஒருமுறை ஒரு சஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து துஆவிற்காக வேண்டினார். அதற்கு அவர்கள் நான் துஆ செய்வேன். ஆனால் நீங்களும் உங்களது துஆக்கள் மூலமாக எனக்கு உதவுங்கள் என்று கூறினார்கள். இந்த அழகிய காட்சி தான் ஒரு முஸ்லிம் சமுதாயத்தில் இருக்க வேண்டும். முதலில் உங்களது செயல்களைச் சீர்திருத்த வேண்டும். பிறகு உங்களுக்காக நீங்கள் துஆ செய்ய வேண்டும். மேலும் எவரிடம் நீங்கள் துஆவிற்காக கூறுகின்றீர்களோ அவருக்கும் உங்களது துஆக்கள் மூலமாக உதவி செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கேற்ப செய்யப்படும் துஆக்கள்தான் ஏற்றுக்கொள்ளப்படும் தகுதியைப் பெறுகின்றன. அவர்கள் கூறியிருக்கும் வழிமுறைகளுக்கேற்பவே துஆ செய்ய வேண்டும். வேறு எந்த வழிமுறையும் இருக்கக் கூடாது. இந்த துஆக்களிலும் கூட மார்க்கம் உயர்வான நிலையை அடைவதற்காக செய்யும் துஆவிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இந்த சிந்தனையுடன் துஆக்கள் செய்யப்படும் போதுதான் எந்தப் புரட்சி ஏற்படுவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான அடிமையை அனுப்பி வைத்தானோ அந்தப் புரட்சி ஏற்படும். அவரது வருகையின் மூலம் சுவர்க்கம் மனிதனுக்கு அருகில் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அஹ்மதியும் தனது சிந்தனையை இந்த வழிமுறைக்கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். தங்களது செயல்களை இந்த சிந்தனையுடன் செய்வது அவசியமானதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்து வைக்கின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்:

மார்க்கத்துடன் உலகம் ஒன்றுசேர முடியாது என்பதை உண்மையாகவே நான் உங்களுக்கு கூறிக்கொள்கின்றேன். உலகம் மார்க்கத்திற்கு உதவக்கூடிய ஊழியராக இருக்க வேண்டும். ஆனால் உலகம் மார்க்கத்திற்கு இணையாக ஒருபோதும் இருக்க முடியாது. எவருக்கு அல்லாஹ்வுடன் தூய்மையான தொடர்பு இருக்கின்றதோ அவர்கள் பிறரிடம் யாசித்ததாக எங்கும் நாம் பார்க்க முடியாது. மாறாக அல்லாஹ் அப்படிப்பட்டவர்களது சந்ததிகள் மீதும் கருணை காட்டுகின்றான். இவ்வாறான நிலைமை இருக்கும் போது உலகச் செல்வங்களை ஒன்றுசேர்க்க நாம் ஏன் இவ்வளவு சிரமப்பட வேண்டும்? பைஅத்திற்கேற்ப உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்கள்தான் சிறந்தவர்கள் ஆவர். இந்த உடன்படிக்கையை மனதில் நிறுத்தியவாறு ஒரு நபர் அல்லாஹ்வின் பக்கம் செலுத்தும் போது அல்லாஹ்வும் அவருக்கு ஆற்றலை வழங்குகின்றான்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்:

சஹாபாக்களின் நிலைமையைப் பார்த்து நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. எவ்வாறு அல்லாஹ் அவர்களை தூய்மைப்படுத்தியுள்ளான்? ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை பாருங்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் விளைவாக அவர்களிடம் எத்தகைய மாற்றம் ஏற்பட்டது? இவ்வாறே நமது ஜமாஅத்தைச் சேர்ந்த எந்த நபர்களின் ஈமான் இதைப்போன்றே வளர்ச்சி அடைந்து வருகிறது என்பது பற்றி நமக்கு என்ன தெரியும்? அல்லாஹ்வே மறைவான செய்திகளை அறிந்தவனாக இருக்கின்றான். அவர்களது ஈமானிய ஆற்றல்கள் வளர்ச்சி அடைந்து ஒரு ஜமாஅத்தை நிலைநாட்டக் கூடியதாக இல்லையென்றால் இந்த இயக்கம் எப்படி செயல்பட முடியும்? ஆனால் நன்றாக நினைவில் வையுங்கள். எந்த ஜமாஅத்தின் பாதங்கள் இறைவனுக்காக இல்லையோ அதனால் என்ன பயன் ஏற்பட முடியும்? அல்லாஹ் ஒருவரிடம் திருப்தி அடைந்து பரிசுத்த ஆவியின் மூலம் அவருக்கு உதவி செய்யும் போது இறைவனுக்காக அடியெடுத்து வைப்பதும் எளிதான விஷயமாக ஆகிவிடுகின்றது. தமது நஃப்ஸை தியாகம் செய்யாத வரை இந்த விஷயங்கள் உருவாக முடியாது. அதற்கேற்ப செயல்படவும் முடியாது.

எவர் தனது இறைவனின் தகுதிக்கு அஞ்சியவராக தனது நஃப்ஸை அதன் இச்சைகளிலிருந்தும் தடுத்துக் கொண்டாரோ நிச்சயமாக அப்படிப்பட்டவரது தங்குமிடமாக சுவர்க்கம்தான் இருக்கும். ஒருவர் தன்னை மன இச்சைகளிலிருந்தும் தடுத்துக் கொண்டால் சுவர்க்க வாழ்க்கை இந்த உலகிலிருந்தே அவருக்கு ஆரம்பமாகி விடுகிறது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

தனது மனதை அதன் இச்சைகளிலிருந்தும் தடுத்து கொள்வதையே சூஃபிகள் ஃபனா என்ற தகுதியாக குறிப்பிடுகின்றார்கள். இந்த எல்லா விஷயங்களையும் நான் மீண்டும் மீண்டும் கூறக்காரணம் இறைவன் இந்த ஜமாஅத்தை நிலைபெறச் செய்ததன் நோக்கமே உலகில் தொலைந்து போய்விட்ட அந்த உண்மையான இறைஞானத்தை பெறுவதேயாகும். மேலும் அதன் நோக்கம் இந்தக் காலத்தில் தென்படாத அந்த உண்மையான தக்வாவையும் தூய்மையையும் மீண்டும் நிலைநாட்டுவதேயாகும். பொதுவாக உலகில் தற்பெருமை பரவியுள்ளது. ஆலிம்கள் தங்களது அறிவின் பெருமையிலும் அகங்காரத்திலும் சிக்கியுள்ளனர். மார்க்க அறிஞர்களின் நிலையும் வேறு விதமானதாக ஆகி விட்டது. அவர்களுக்கு நஃப்ஸை சீர்திருத்துவதற்கான எந்தப் பணியும் இல்லை. அவர்களது நோக்கங்களும் குறிக்கோள்களும் உடலோடு சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாக இருக்கின்றது. எனவே அவர்களது முயற்சிகளும் பயிற்சிகளும் வேறு விதமாகத்தான் உள்ளன. உதாரணமாக, திக்ர் சபைகளைக் கூட்டுவது இதுபோன்ற செயல்களை நபித்துவத்தின் நீரூற்றிலிருந்து நம்மால் அறிய முடியவில்லை. அதாவது இவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்ததாக நிரூபணமாகவில்லை. அதுபற்றி எதுவுமே அந்த நடைமுறையில் நமக்கு தெரியவில்லை. உள்ளங்களை தூய்மைப்படுத்துவதன் பக்கம் அவர்களுக்கு கவனமே இல்லை என்பதை நான் பார்க்கின்றேன். உடல் மட்டுமே அவர்களிடம் எஞ்சியுள்ளது. அவற்றில் ஆன்மீகத்தின் பெயரும் அடையாளமும் கூட இல்லை. இந்த அவர்களது முயற்சிகள் அவர்களது உள்ளத்தை தூய்மைப்படுத்த முடியாது. இறைஞானத்தின் உண்மையான ஒளியையும் அவை அவர்களுக்கு வழங்க முடியாது. இந்தக் காலம் ஆன்மீகத்தை விட்டும் காலியானதாக இருக்கின்றது.

இப்போது அந்த நபித்துவத்தின் காலக்கட்டம் மீண்டும் வர வேண்டும் என அல்லாஹ் விரும்புகின்றான். அந்த தக்வாவும் தூய்மையும் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும். அதனை இறைவன் இந்த ஜமாஅத் மூலமாக செய்ய நாடியுள்ளான்.

எனவே, உண்மையான சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது. உங்களது கடமையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய வழிமுறைக்கேற்ப அந்த சீர்திருத்தத்திற்கான வழிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! அதன் மூலமாக நாமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஏற்பட இருந்த அந்த புரட்சியிலும், அந்த மாற்றத்திலும் பங்கு பெறுபவர்களாக ஆவோமாக! அது அவர்கள் மூலமாக விதிக்கப்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 23.09.2011**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**